**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 53/2024**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 முகில் –**திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 08.04.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை:</u>**

1) நான் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி. 2 முதல் 4 பிரதிவாதிகள் எனது சகோதரிகள். 5ம் பிரதிவாதி எனது சகோதரியின் கணவர். வழக்கில் உள்ள சொத்து விபரங்களை படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். வழக்கு சொத்து 11.09.1986 ம் தேதி வாதியால் ஒரு வைரன் என்பவரிடம் இருந்து கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். அய்யண்ணன் செட்டியார் என்பவர் மணப்பாறை கிராமம் நாடக்காம்பட்டியை சேர்ந்தவர் என்றால் சரிதான். அய்யண்ணன் செட்டியாரிடம், 1ம் வாதி கருப்பண்ணன் கடன் பெற்றிருந்தார் என்றும், அவர் கடனை திரும்ப செலுத்தாததால் 1ம் வாதிக்கு எதிராக அய்யண்ணன் செட்டியார் தீர்ப்பு வாங்கியிருந்தார் என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் 1ம் வாதியின் கிரைய சொத்துக்களை அய்யண்ணன் செட்டியார் நீதிமன்றம் மூலமாக ஏலத்தில் எடுத்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு தற்போது 27 வயதாகிறது.

2) 30.07.1997 ம் தேதி வாதிகளுக்கும், அய்யண்ணன் செட்டியாருக்கும் இடையே வாய்மொழியாக ஒரு குத்தகை ஒப்பந்தம் ஏற்பட்ட விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், நேரடியாக தெரியாது, ஆனால் அது பொய்யானது, நாங்கள்தான் விவசாயம் செய்து வருகிறோம். தாவா சொத்து சம்பந்தமாக எனக்கு எந்த ஆண்டில் இருந்து நல்ல விபரம் தெரியும் என்றால் 2006 ம் வருடம் முதல் எனக்கு நன்கு விபரம் தெரியும். 2006 க்கு முந்தைய விபரங்களை நான் கேள்விப்பட்டதன் அடிப்படையில்தான் சொல்கிறேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் வெள்ளைச்சாமி. எனது தகப்பனார்

கிரையம் பெறுவதற்கு முன்பாகவே வாதிகள் அய்யண்ணன் செட்டியாரிடம் குத்தகை செலுத்தி தாவா சொத்தை அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் எந்த தேதியில் தாவா சொத்தை கிரையம் வாங்கனிார் என்றால் தேதி தெரியவில்லை, 1997 ம் வருடம் வாங்கினார். தாவா சொத்துக்கள் எத்தனை சர்வே எண்களில் கட்டுப்பட்டது என்பதும், ஒவ்வொரு சர்வே எண்ணிலும் எவ்வளவு நிலம் உள்ளது என்பது தெரியுமா என்றால், பட்டா எண் 100 ல் 2 ஏக்கர் 58 செண்ட் நிலம் உள்ளது.

3) தாவா சொத்துக்களை ஒட்டியே வாதிகளின் இதர சொத்துக்களும் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் கிரையம் வாங்கயி பின்னிட்டு தாவா சொத்துக்களை அனுபவம் செய்து வந்ததற்கான அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் 03.03.2008 ல் இறந்துவிட்டார். எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் பதிலுரையில் தாக்கல் செய்த விபரங்களை நான்தான் வழக்கறிஞரிடம் சொன்னேனா என்றால் ஆமாம். எங்கள் பதிலுரையில் வழக்கு சொத்தில் எந்த விதத்தில் அனுபவம் செய்து வருகிறோம் என்பது பற்றி குறிப்பாக சொல்லவில்லை என்றால், நாங்கள்தான் விவசாயம் செய்கிறோம், தற்போது தண்ணீர் இல்லாததால் தரிசாக உள்ளது.

4) தாவா சொத்துக்களில் நாங்கள் விவசாயம் செய்ததற்கான எங்கள் பெயரில் உள்ள அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களை எனது தகப்பனார் கிரையம் பெற்ற பின்னிட்டு, எனது தகப்பனாரிடம் வாதிகள் வாய்மொழியாக குத்தகை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு தற்போதுவரை வாதிகள்தான் தாவா சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 24.02.2024 ல் வாதிகளை தாவா சொத்தில் இருந்து வெளியேற்ற ஆட்கள் துணையுடன் முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. எங்களுக்கு காவல்துறையில் இருந்த செல்வாக்கை பயன்படுத்தி வாதிகளை பலவந்தமாக வெளியேற்ற முயற்சித்தால்தான் வாதிகள் இவ்வழக்கை

தாக்கல் செய்ய நேரிட்டது என்றால் சரியல்ல. வாதிகளை தாவா சொத்தில் இருந்து சட்டப்படியாக வெளியேற்ற தற்போதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், நாங்கள்தான் சுவாதீனத்தில் இருக்கிறோம்.

5) வாதிகள் கொடுக்கும் குத்தகை பணத்திற்கு ரசீது கொடுக்கும் பழக்கம் இல்லாததால் அதை பயன்படுத்தி வாதிகள் குத்தகைதாரர்கள் அல்ல என பொய்யாக எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.2 ஆவணம் நகல் ஆவணம் என்றும், அது யாரால் வழங்கப்பட்டது என்பதற்கான கையொப்பம் எதுவும் இல்லை என்றால் சரிதான், கூட்டுறவு சங்கத்தில் கொடுத்த ஆவணத்தை அப்படியே தாக்கல் செய்துள்ளேன். பி.சா.ஆ.2 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.3 ஆவணம் யாருக்கு வழங்கப்பட்டது என்பதற்கான குறிப்பு இல்லை என்றால் சரியல்ல, எனது அக்காவிற்கு வழங்கப்பட்டது. பி.சா.ஆ.3 ஆவணத்தில் கையொப்பம் செய்துள்ள செயலாளர், பொறுப்பு என்பவர் கூட்டுறவு சங்கத்தில்தான் பணி செய்கிறார் என்பதைக் காட்ட வேறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6) பி.சா.ஆ.4 ஆவணத்திலும் எந்த கையெழுத்தும் இல்லை என்றால், கூட்டுறவு சங்கத்தில் கொடுத்த ஆவணத்தை அப்படியே தாக்கல் செய்துள்ளேன். பி.சா.ஆ.4 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தை தற்போதுவரை வாதிகள்தான் குத்தகைதாரர்கள் என்ற முறையில் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், அதை மறைத்து நாங்கள் எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரியல்ல. எனவே வழக்கில் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**